இல்லாமல் இருக்கிறார்கள். திருச்சிராப்பள்ளியிலே ஆண்களுக்கென்று பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரி இருக்கிறது. அதைப்போல, மகளிருக்கென்று கல்லூரி இருந்தால், ஏழை மகளிர் படிப்பதற்கு, அந்தக் கல்லூரி பயன்படும். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர். திருச்சியிலே வசிப்பவர். ஆகையினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் காலத்தில் திருச்சியிலே ஒரு மகளிர் கல்லூரியை அமைப்பதற்கு மறுபரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சூழ்நிலைகளையெல்லாம் எண்ணித்தான், மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் அவர்கள், அவர்களது மானியக் கோரிக்கையில் பதில் அளிக்கும்போது திருச்சி, அண்ணா நகரில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது பெயரிலே மகளிர் கல்லூரி ஒன்று தொடங்கப்படும் என்று அறிவித்து இருக்கிறார்கள். அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பெண்கள் பயிலுகின்ற வகையில் அங்கே இருக்கின்ற ஆண்கள் கல்லூரிகளில் 30 விழுக்காடு பெண்களை அனுமதிக்கலாம் என்று அரசு விதிமுறை செய்திருக்கிறது. இதையும் கருத்திலே கொண்டுதான் நடவடிக்கை எடுக்க முடியும். நிதிநிலை அடிப்படையிலேதான் புது கல்லூரி தொடங்குவது பற்றி அரசு பரிசீலிப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 519, திரு. நா.சா. பழனிசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

519—

பொள்ளாச்சி வடக்கு ஒன்றியத்தில் தார்ச்சாலையைப் புதுப்பித்தல்.

*11123—திரு. நா. சா. பழனிசாமி :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம், வடக்கிபாளையம் சாலையில் சி. கோபாலபுரம் பிரிவிலிருந்து அர்த்தநாரிபாளையம் வழியாக களத்துபுதூர் வரை உள்ள தார்ச்சாலையைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 மே 4

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம் வடக்கிபாளையம் ரோட்டில் சி. கோபாலபுரம்–தாளக்கரை சாலையில் இருந்து பிரிந்து களத்துப்புதூர் செல்லும் ஊராட்சி சாலை (கி.மீ. 0/0-1/8) 1991–92ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ரூ. 2.97 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது இரண்டாம் வரிசை கப்பி போடும் பணியும் முடிவடைந்து நல்ல தார்ச்சாலையாகத் தற்போது உள்ளது.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த வினாவினை போடுகின்ற காலததிலே அந்தச் சாலை பழுதடைந்து இருந்தது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கொடுக்கப்பட்ட வினா இப்போதுதான் வந்திருக்கிறது. இருப்பதை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்த வினாவில் குறிப்பிட்டிருக்கின்ற இந்தப் பழுதடைந்த சாலையைச் சீர்செய்து, இன்று அந்தச் சாலைக்கு கப்பிப் போட்டு தார்சாலையாக மாற்றி நல்ல நிலையிலே மாற்றி நான் உண்மையிலேயே அவரைப் பாராட்டி நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்தச் சாலை கேரள எல்லையையொட்டியுள்ள கிராமங்களை, மிகவும் பின்தங்கிய பகுதிகளிலே இருக்கின்ற இந்தச் சாலையை நல்ல முறையிலே சீர் செய்து இன்றைக்குப் பேருந்துகள் விடுகின்ற அளவிற்குச் செய்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொண்டு, மேலும் இதுபோல, சீரழிந்திருக்கின்ற பல சாலைகள் என்னுடைய தொகுதியிலே இருக்கின்றன. இருந்தாலும், இந்தச் சாலையைப் போலவே, அந்தச் சாலைகளையெல்லாம் விரைவாக நல்ல தார்ச்சாலையாக மாற்றிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றிலேயே எந்த ஆட்சிக் காலத்திலும் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டு இதய தெய்வம், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், நடப்பு நிதி ஆண்டிலே மட்டும் சுமார் 2,500 கிலோ மீட்டர் சாலைகளைக் கப்பிச் சாலைகளை, தார்ச் சாலைகளாக மாற்றுகின்ற திட்டத்திற்கு ஆணையை வழங்கி இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய தொகுதியிலே இருக்கின்ற எந்தெந்தச் சாலைகள் உடனடியாகப் பழுது பார்க்க வேண்டியவை என்பதைக் குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால், என்னிடம் எழுதிக் கொடுப்பார்களேயானால் அரசு அது சம்பந்தமாக அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 520, திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. எஸ். ஆசைமணி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

520—

மயிலாடுதுறை காய்கறி சந்தைக்குப் புதிய கட்டிடம் கட்டுதல்.

*16763—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்—கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை நகராட்சிக்குச் சொந்தமான காய்கறி சந்தைக்கு புதிய கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மயிலாடுதுறை நகராட்சிக்குச் சொந்தமான திரு. வி.க.) சந்தையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு நகராட்சி நகர்ப்புற வளர்ச்சி நிதி (Municipal Urban Development Fund) திட்டத்தின்கீழ் ரூ. 20.26 லட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது. விரைவில் பணிகள் தொடங்கப்பட உள்ளன.

திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 இலட்சம் ரூபாய் அதற்காக நிதி ஒதுக்கப்பட்டு இருப்பதாகவும் விரைவிலே அதற்கான பணிகள் தொடங்கப் படும் என்றுப் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அதற்காக அந்தப் பகுதி மக்களின் சார்பாக நன்றியைச சொல்லி இந்தக் கட்டிடம் இல்லாத காரணத்தினால் ஆங்காங்கே தள்ளு வண்டிகளிலும் பிளாட்பாரங்களிலும் காய்கறிகளை விற்பவர்கள் காய்கறிகளைப் போட்டு விற்கின்ற காரணத்தினால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு அதிகமான விபத்துக்கள் ஏற்படுவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கின்ற காரணத்தினால் கூடிய விரைவிலே அந்தக் கட்டிடத்தைக் கட்டி அந்தப் பகுதிக்கு இந்த காய்கறி வியாபாரத்தை மாற்றுவதற்கு மாண்புமிகு அமைசசர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே மயிலாடுதுறை நகராட்சியிலே இன்றைக்கு அந்த நகரத்தினுடைய வளர்ச்சிக்காகத் தமிழ்